இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் தேதிய

பகுதி II இற்குக் குறைநிரப்பி

27.12.76 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது)

# இலங்கை உரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார்கள் (திருத்தம்)

இலங்கை உரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கை உரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார்கள் (திருத்தம்)

**இலங்கை உரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

கண்டியின் உரோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரின் திருக்கோயில் தொடர்பான நியாயாதிக்கத்தின்கீழ் இதுவரையிருந்த பிரதேசத்தின் பாகமொன்று, பதுளை மேற்றிராசனப் பிரிவு என்றழைக்கப்படும் புதிய மேற்றிராசனப் பிரிவாக இப்போது உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும், அதனை நிருவகிப்பதற்கென பெனடிக்ற்ற சமயப் பணித்துறையைச்சேர்ந்த அதி வணக்கத்துக்குரிய டாக்டர் டொம் லீயோ நாணயக்காரா அவர்கள் பதுளை மேற்றிராணியாராக உரிய முறையில் நியமிக்கப்பட்டுள்ளாராதலாலும் :

பதுளை மேற்றிராணியாரைக் கூட்டிணைப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், வேறு விடயங்கள் தொடர்பிலும் இலங்கை உரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவது உகந்ததாகவுள்ளதாதலாலும் :

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 1977 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை உரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*338 ஆம் அத்தியாயத்தில் 3அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை உரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார்கள் கட்டளைச்சட்டமானது, அக் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவை உடனடுத்து, அதன் 3அ என்னும் பிரிவாகப் பயனுடையதாகவேண்டிய பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"*பதுளை மேற்றிராணியாரைக் கூட்டிணைத்தல்.*

3அ. பதுளை உரோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரும் பெனடிக்ற்ற சமயப் பணித்துறையைச் சேர்ந்தவருமான அதிவணக்கத்துக்குரிய டாக்டர் டொம் லீயோ நாணயக்காரா அவர்களும், உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் சட்டங்களுக்கும் வழக்காறுகளுக்கும் இணங்க உரிய முறையில் நியமிக்கப்படும் அவரது வழியுரிமையாளர்களும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டுமென்பதுடன், இக்கட்டளைச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் பதுளை மேற்றிராணியார் என்ற பெயரைக் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்தகைய பெயர்கொண்டு இடையறு வழியுரிமையுடையதாகவும், ஒவ்வொரு விவரணத்தினதுமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைக் கொள்ளவும், கொள்வனவு செய்யவும், எடுக்கவும், வைத்திருக்கவும், துய்க்கவும், அதனை விற்கவும் அல்லது வேறு

2—ஏ 24051-6,915 (12/76)

வகையாகக் கையாளவும் முழுத் தத்துவமுடைய தாகவும் இருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆதனம் தொடர்பில் எல்லா நீதி மன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கவாம் அல்லது அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.".

*முதன்மைச்சட்ட வாக்கத்தில 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது; இது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும் :—

*" ஆதனத்தை பதுளை மேற்றிராணி யாருக்குரித் தாக்குதல்.*

5அ. பெனடிக்ற்ற சமயப் பணித்துறையைச் சேர்ந்த சொல்லப்பட்ட அதிவணக்கத்துக்குரிய டாக்டர் டொம் லியோ நாணயக்காரா அவர்களினால் தாம் வகிக்கும் பதவியைக்கொண்டு ஏலவே கொள்ளப்பட்ட, வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமைகொள்ளப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் யாவும், அவை தொடர்பான ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்புக்கு அல்லது நிபந்தனைக்கு அமைய, சொல்லப்பட்ட பதுளை மேற்றிராணியாருக்குரித்தாதல் வேண்டும்.".

*முதன்மைச்சட்ட வாக்கத்தின் 6ஆம் பிரிவுக்கான திருத்தம்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

" 2அ. பதுளை மேற்றிராசனப் பிரிவு உருவாக்கப்பட்டதன் காரணத்தினால் எந்த அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்கள் பதுளை மேற்றிராணியாரின் நிருவாகத்துக்கு அமைந்தனவாக வருகின்றனவோ அவ்வாதனங்கள் யாவும் தொடர்பில் பதுளை மேற்றிராணியாரின் சார்பில் கண்டி மேற்றிராணியாரினால் முடிக்கப்பட்ட சொத்துரிமை மாற்றல், கைமாற்றல் அல்லது உரிமைமாற்றல் சாதனம் எதுவும், முத்திரைக் கட்டளைச்சட்டத்திற்கான அட்டவணை " அ " வின் பாகம் I, 23 (7) ஆம் விடயத்தின்கீழ் கட்டணம் அறவிடப்படற்குரிய சாதனமாகக் கருதப்படுதல்வேண்டும்.".